Rgistered No. M. 1159.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

இது
சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்
எனப் பெயரிய
**சைவ மஹா சபையின்**
மாதாந்தப் பத்திரிகை.


| மலர் | | இதழ். |
|---|---|---|
| 5. | சித்தார்த்தி ஞு-ஐப்பசிமீ -1919 ஞு-அக்டோபர்மீ<br>" கார்த்திகைமீ " நவம்பர்மீ | 10-11 |


உள்ளுறை.


| | பக்கம். |
|---|---|
| விநாயகர் துதி. ... ... | 169 |
| தாயுமானசுவாமிகள் பாடல் ... ... | 170 |
| சிவஞானபோதம் ... ... | 184 |
| அர்ச்சாதீபம் ... ... | 190 |
| கோபப்பிரசாதம் உரை ... ... | 192 |
| ஓர் நன்கொடை ... ... | 193 |
| ஸ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம் ... ... | 198 |


இஃது
திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம்
ஸ்ரீலஸ்ரீ - சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளுக்குச்
சமர்ப்பிக்கப்பெறுவது.


பத்திரிகாசிரியர்
இருக்கம் - ஆதிமூலமுதலியார்,
(Retired Accountant, Military Accts., Department.)
நெ. 43, பாலையப்பன் வீதி, ஏழுகிணறு, சென்னை.



வைதிக சைவ அச்சுகூடம்,
நெ. 292, தங்கசாலை வீதி, சென்னை.
1919.
தபாற் செலவு உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்று.

# விளம்பரம்.

சர்வபண்டங்களும் விலையேறிவிற்கும் இக்காலத்திலும் சமயாபிமானப்பித்தேறி நாங்கள் டைட்டில்பேஜ் உட்பட வருடம் ஒன்றுக்குச் சுமார் 42-பாரம் கொண்ட இப்பத்திரிகையை தபால் செலவும் வி. பி. செலவும் உட்பட ஒற்றை ரூபாவுக்கு அனுப்பியும் சென்றவருடத்தில் நூற்றுக்கு நாற்பதுபேர் சமயாபிமானம் தானும் இல்லாமல் பத்திரிகையைத் திருப்பி விட்டார்கள். அந்தோ, சைவசமயத்தின்கதி என்னே! என்னே!!

சென்ற வருடமுடிவில் வைதிக சைவ அச்சுக் கூடத்திற்கு யந்திரம் வாங்கினதினுல் நேரிட்டகடனைத் தீர்க்கும்பொருட்டு, இத்திருக்கூட்டத்தினர் பல துறைகளிலும் செலவைச் சுருக்கவேண்டியிருந்தமையால் இவ்வருடத்தில் சில சமயங்களில் இரண்டு மாதப்பத்திரிகையை ஒன்ருய்ச்சேர்த்து அச்சிட்டனுப்ப நேரிட்டது. அடுத்தவருடம் அவ்வாறு செய்ய நேரிடாதென்று எதிர்பார்க்கிறோம்.

அடுத்த டிசம்பர் மீ பத்திரிகை வழக்கம்போல் வருட அட்டவணை டைட்டில்பக்கம் முதலியவற்றோடு வெளிவரும். அதற்குப்பின்,

அடுத்தவருடத்து ஜனவரி மீ பத்திரிகை வழக்கப்படி ஒரு ரூபாவுக்கு வி. பி. தபாலில் அனுப்பப்படும். அன்பர்கள் எவரும் அதைத்திருப்பி இச்சபைக்கு நட்டமுண்டாக்காமல் தொகை கொடுத்துப் பெற்று இத்தெய்வச் சைவப் பயிரால் விளையும் சிவபோகாமுதத்தைத் தாமும் உண்டு ஏனை உலகினர்க்கும் ஊட்டுமாறு பிரார்த்திக்கின்றனம்.

பத்திராதிபர்.

இருக்கம். ஆதிமூலமுதலியார்,

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.


| மலர் 5. | சித்தார்த்தி ஹூ - ஐப்பசி மீ - 1919 ஹூ - அக்டோபர் மீ<br>,, கார்த்திகை மீ ,, நவம்பர் மீ | இதழ் 10-11, |
|---|---|---|


## விநாயகர் துதி.

வாழத் தானனத் தான்மக வான்கட
லாழத் தானநத் தானரு மாதவர்
சூழத் தானனத் தான்ச் சுரர்தொழும்
வேழத் தானனத் தான்பத மேற்கொள்வாம்.

(இதன் பதப்பொருள்.) வாழத்தான் அனத்தான் = அன்னவாகனமுள்ள பிரமதேவனானவன் தான்வாழவும், மகவான் = தேவேந்திரனும், கடல் ஆழத்து ஆன = சமுத்திரத்திலுண்டாகிய, நத்தான் சங்கமேந்திய திருமாலும், அரு மாதவர் = அருமையாகிய தவமுனிவர்கள், சூழ = சூழும்படி, நன = தெளிவுள்ள, தானம் = சுவர்க்கலோகத்திருக்கும், சுரர் = தேவர்களும், தொழும் = தொழுகின்ற, வேழத்து ஆனனத்தான் = யானையின்முகமுள்ள விநாயகருடைய, பதம் = திருவடிகளை, மேற்கொள்வாம் = எம்முடைய சிரசின்மேல் தரித்துக்கொள்வாம்—என்றவாறு.

பிரமன் - தேவேந்திரன் - திருமால் - முனிவர்கள் - தேவர்கள் என்னுமிவர்கள் தாம்வாழும்படி தொழுகின்ற விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளை வணங்குகிறோம் என்பது தாற்பரியம். 'வாழ' என்பதனை ஆங்காங்குக் கூட்டிக்கொள்க. நூறு அசுவமேதஞ்செய்து இந்திரபட்டம் அடையத்தக்கதாகையால், தேவேந்திரனுக்கு மகவான் என்று ஒருபெயர். சதமகன் என்னும் பெயரினையுமுணர்க. சதம் - என்பது நூறு. மகம் - என்பது யாகம். ஆழ்ந்தகடலென்பது தோன்ற - கடலாழம் - என்றார். சூழத்தான் என்பதைச்சேர்ந்த - தான் - என்பது இடைச்சொல். நனவு என்னுஞ்சொல் ஈண்டுவிகாரவகையால் - நன - என நின்றது. தேவர்கள் சாக்கிராவஸ்தை யுள்ளவர்களாதலால் - நனத்தானச்சுரர் - எனவிசேடித்துக்கூறினர்.

# ஸ்ரீமத் தாயுமானசுவாமிகள்

## திருவருள்விலாசப் பரசிவவணக்க உரை.

இஃது

புரசை-அஷ்டாவதானம்-மகாவித்வான்

சபாபதி முதலியாரவர்கள் இயற்றியது.

---

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமா
    யானந்த பூர்த்தியாகி
யருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
    யகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
    தழைத்ததெது மனவாக்கினிற்
றட்டாம னின்றதெது சமயகோடிக ளெலாந்
    தந்தெய்வ மென்றெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
    வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
    யென்றைக்கு முள்ளதெதுமேற்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
    கருத்திற் கிசைந்தததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
    கருதியஞ்சலி செய்குவாம்.

இந்நூலாசிரியர் மேலே [உ-வது. பாட்டில்] "பெரிய பொருளைப் பணிகுவாம்" என வியந்து வாழ்த்துதல் செய்யும் சிவத்தின் வியாபக வியாப்திகள் பலவற்றையும் தொகுத்து 'முடிந்தது முடித்தல்' என்னும் உத்தியால் கூறுவான் எடுத்துக்கொண்டது இச்செய்யுளின் கருத்தாம்.

"அங்கு இங்கு எனாதபடி" என்பது:—அண்டபகிரண்டங்களாகிய சேய்மைக்க ணுள்ளதெனவும், அன்றிப் பூமி பாதலங்களென்னும் அணிமைக்க ணுள்ளதெனவும் கண்டித் துரைக்கப் படாமை.

இனம் பற்றி 'உங்கு' எனவுங் கூட்டி அவற்றிற்கு இடைவெளியின்க ணுள்ளதெனவு முரைக்க.

"எங்கும் ப்ரகாசமாய்" என்பது:—மேல், கீழ், உள், புறம், நடு, பக்கங்க ளனைத்தும் பரந்து நிற்கும் பேரொளியாகி,

"ஆனந்த பூர்த்தியாகி" என்பது:—அவ்வாறே யகண்ட பூரணாநந்தமாகி,

"அருளொடு நிறைந்ததெது" என்பது:—தனது திருமேனியாகிய பேரருளோடு விபுவாயுள்ளது எப்பொருள்,

'என்னாத' என்பது 'எனாத' என இடைகுறைந்தது. 'ஆனந்த பூர்த்தி' வடசொற் புணர்ச்சி யாதலின் இயல்பாயது. 'ஒடு' உருபு 'ஈட்டிய விரண்டாம்வேத நூறுருவோ டெழுந்தது' என்றாற்போல ஒற்றுமைப் பொருட்கண் வந்தது.

அருள் ஆவது-அபின்னசத்தி, நிறைவு ஆவது-உதியாமல் முக்காலத்தினும் உள்ளதாகி, ஓங்கிப் பேராமல், குறையாமல், இடையறாமல், அசைவின்றிப் பரந்து நிற்குந்தன்மை. இதனைப் பூரணமென்றும் விபுவென்றுங் கூறுவர். இந்நூலாசிரியர் மேலே "அண்டபகிரண்டமு மடங்கவொரு நிறைவாகி யானந்த மானபரமே" என்றும், "பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே" என்றும் பலவிடங்களினும் கூறியவா றுணர்க.

அன்றியும், 'அங்கு' வீடுபேறாகிய அம்மைக்கண்ணும், 'இங்கு' உயிர்வாழ்க்கைக் கிடமாகிய இம்மைக்கண்ணும் எனலும் ஒன்று. இனம்பற்றி உம்மைக்கண்ணு மெனக் கூட்டி யுரைக்க. எனவே, அண்டதத்துவம் பிண்டதத்துவ முதலிய அனைத்திடமுமா மென்பது பெற்றாம். அவையாவன:—பிருதிவியண்டம்-புவலோகமுதல் சிவலோக மளவாக எழுலோகமும், மேல் அண்டகடாகமும் பிரமாண்டமும், மேல் அப்பு தேயு வாயு ஆகாயங்களாகிய அண்டங்களும், மேல் மனம் புத்தி ஆங்காரம் குணம் ஆகிய அண்டங்களும், இவைக்கு மேல் பிரகிருதியண்டமும், மேல் அராகம் வித்தை கலை நியதி காலங்களாகிய அண்டங்களும், மேல் அசுத்த மாயையும், அதன் மேல் சுத்தமாயையில் சுத்தவித்தை மாகேச்சுரம் சாதாக்கியங்களும், அவைக்குமேல் பரவிந்து பரநாதங்களும், எண்பத்து நூறுயிரம் யோசனை கனமுள்ள பூமியும், கனிட்ட பாதலமும், கீழே ஆடகேசுரர்க்குப் புவனமாகிய எழுபாதலங்களும், கூர்மாண்டரென்னும் உருத்திரபுவனமுமாய் அண்டகடாகமுட்பட்ட புவனமும், இன்ன அண்டங்களனைத்திற்கும் ஆதார பூதமாய்ச் சிவசத்

தியான ஆதாரசத்திக்கும் அப்பாலும் சிவத்தின் பூரண அளவு எல்லைப்படா தாதலால்,

"ஆதியுமந்தமு மில்லாவரும் பெருஞ்சோதி"

எனவும்,

"அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண்"

எனவும் பெரியா ருரைத்தவாற்று னுணர்க.

அங்குள்ளது எனின் இங்கில்ல தெனவும், இங்குள்ளது எனின் அங்கில்ல தெனவும், அங்கிங்குள்ளது எனின் எங்குமில்ல தெனவும் ஐயப்பொருட்கு இடமாகாமே "அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி" என வற்புறுத்திக் கூறினர்.

அனாதி முத்த சித்துருவாகிய பதிக்கு அருளே திருமேனி என்பதற்கு உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சூத்திரம்-க, பாட்டு-சஎ.)

"உருவருள் குணங்க ளோடு முணர்வரு ளுருவிற் றோன்றுங்
கருமமு மருள ரன்றன் கரசர ணாதி சாங்கந்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானரு ளனக்கொன் றின்றி
யருளுரு வுயிருக் கென்றே யாக்குவ னமலன் றானே."

மற்றும் வனவற்றாற் காண்க.

"தன்னருள் வெளிக்குளே" என்பது:—அங்ஙனம் தனது அருளாகிய வெளியினிடத்தே,

"அகிலாண்ட கோடி எல்லாந் தங்கும்படிக்கு" என்பது:— அனந்தகோடி அண்டபுவனங்கண் முற்றும் பரிணமித்துத் தங்குமாறு,

"இச்சைவைத்து உயிர்க்கு உயிராய்த் தழைத்தது எது" என்பது :—அருளைக்கருதி இச்சையை வைத்து உயிர்கட்குள் உணர்வாகி விரிந்துள்ளது எப்பொருள்,

அருள்வெளி என்பது தனது சந்நிதானமாம். ஆகவே, தனது சந்நிதான மாத்திரத்தாலே எல்லா வுலகங்களுந் தோன்றி விரிந்து அடங்கு மென்பதாயிற்று. தனது அருள் ஆதியி லொன்றாயிருந்து, பின்னர் இச்சை ஞானம் கிரியைகளாகி, முறையே மலத்தான் மூடப்பட்டுள்ள ஆன்மாக்களுக்கு அருள் செய்தற் பொருட்டு வைத்த கிருபையை 'இச்சைவைத்து' என்றும், தனது ஞான

சத்தியால் அவர்களது நலத்தை விரும்பி அறிதலை 'உயிர்க்குயிராய்' என்றும், கிரியாசத்தியால் அவர்களுக்குத் தநுவாதி பிரபஞ்சங்களைத் தருதலை 'தழைத்தது' என்றும் கூறினர்.

ஆன்மாவும் இச்சை ஞானம் கிரியைகளை உடையனாயினும் அவற்றை அநாதியாகிய மலம் மறைத்து நிற்கும். மெய்ப்பொருளின் சத்திகள் ஒன்றானும் மறைக்கப்படாமல், தான் அவற்றின் மூகமாக ஆன்மாவுக்கு கன்மவளவையால் போகாதிகளைக் கொடுத்து, அவற்றால் தாக்கப்படாமல், தன்னந்தானே யறிந்து விளங்கு மியல்பிற்று. இதுவே அவ்விரண்டற்கும் வேற்றுமை எனக் காண்க.

தனது சந்நிதி மாத்திரமன்றி யாண்டும் பிறிதோரிட மின்றுதலால் 'அருள் வெளிக்குளே' என்று தேற்றப்பொருளிற் கூறினர்.

"இச்சைவைத் துயிர்க்குயிராய்த் தழைத்தது" என்றதற்கு உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சூத்-க. பா-சுரு.)

"ஒன்றதா யிச்சா ஞானக் கிரியையென் றொருமூன் றாகி
நின்றிடுஞ் சத்தி யிச்சை யுயிர்க்கரு ணைச மாகும்
நன்றெலா ஞான சத்தி யானயர் தறிவ னாத
னன்றருட் கிரியை தன்னா லாக்குவ னகில மெல்லாம்."

தன் சந்நிதியின்கண் முத்தொழில்களும் நிகழும் என்பதற்கு உதாரணம்:—

(திருவிளையாடற்புராணம், பாயிரம்.)

"பூவண்ணம் பூவின்மணம் போலமெய்ப் போத வின்ப
மாவண்ண மெய்கொண்ட வன்றன்வலி யாணை தாங்கி
மூவண்ண றன்சந்நிதி முத்தொழில் செய்ய வாளா
மேவண்ண லன்னான் விளையாட்டின் வினையை வெல்வாம்.

"மனவாக்கினில் தட்டாமல் நின்றது எது என்பது:—மனத்தான் இத்தன்மைத்தென நினைத்தற்கும், வாக்கால் இன்னதென உரைத்தற்கும் இயையாவண்ணம் அதீதமாகி நின்றது எப்பொருள்,

இனம் நோக்கிக் காயத்தாலும் பற்றற் கமையாதெனவும் உரைக்க. இதனால் தத்துவ மூன்றற்கும் மேலாய் நிலைபெற்றுள்ளது அப்பொருள் என்றதாம்.

உள்ளே நின்று சங்கற்ப விகற்பங்களைச் செய்வதால் சலம் என்றும், இந்திரியங்களைப் புறத்தே விடயங்களிற் செலுத்துவ தால் அசலம் என்றும் கூறப்பட்ட மனம் பிரகிருதியில் தோற்றம். சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்னும் நான்கு வாக்குகளும் விந்துவில் தோற்றம். இவையெல்லாம் பசுபாச ஞானங்களின் வழிப்பட்டு இயங்கிப் பின்பு பதிஞானம் மேற்பட்டெழும் எழுச்சி யின்கண் கீழ்ப்பட் டடங்குமாதலால், அவற்றில் 'தட்டாமல் நின்ற தெது' என்றார். இஃது நின்மல துரியம். இந்நிலையின்கண் மனச் செயலும் வாக்கின் காரியங்களும் இல்லையாய் நிற்க, மேல் அவற்றோடு சிறிதுந் தாக்கற்றதாய்ச் சிவம் அதீதமாகி நிற்கும் என்பதாம்.

வாக்கு நான்கனுள், சூக்குமை விந்துவினுள்ளே அரும்பும்; பைசந்தி இதயத்துள் மயின் முட்டையுட் சலம்போன்று மலரும்; மத்திமை கண்டத்துள் சவிகற்பமா யுணரத்தக்க ஒலியாய்க் காய்க் கும்; வைகரி வாயினின்றும் செவியிற்கேட்கப் படுவதாய்ப் பொருள் தரு மொலியாய்க் கனிந்து வெளிப்படும்; இவை வாக்கின் உற்பத்தியாம்.

மனவாக்கு முதலியவற்றில் தட்டாதது என்றதற்கு உதார ணம்:—

(திருவிளையாடற் புராணம்-நான்மாடக் கூடலான படலம்.)

"பூதங்களல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ள மதியின்
பேதங்களல்ல விவையன்றி நின்ற பிறிதல்ல வென்று பெருநூல்
வேதங் கிடந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப கூடன் மறுகிற்
பாதங்க ணோவ வளையிந்த ஞதி பகர்வாரை யாயு மவரே."

மற்றும் வருவனவற்றாற் காண்க.

மனவாக்கினில் தட்டாம னின்றதற்கு மற்றொரு பிரகாரமாக வுரைப்பினுமாம். அஃதாவது:—மனம் - மானதக்காட்சியும், வாக்கு - (வேதமுதலிய வாக்காகிய) ஆகமமும், இவை முதலிய அளவைகளாலும் பற்றப்படாதது என்பதாம். வாக்கிலும் என உம்மை விரிக்க.

" ஆசிலாசார தபோதனரின்புறு—வாசகாதீத மனோலயபஞ்சரன்." என்றதா னுணர்க.

" சமயகோடிகளெலாம் தம்தெய்வம் எம்தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றது எது"

என்பது:—பல்வேறு சமயங்களெல்லாமும் தமது தமது தெய்வமென்றும், எமது எமது தெய்வமென்றும் முறையிட்டு, எவ்வெவ்விடங்களினும் ஒருவரைவிட்டொருவர் விடாதுபற்றி எதிர்த்து வாதித்திடுமாறும், அவ்வச்சமயங்கடோறும் அவரவர் கடவுளராய் வீற்றிருப்பது எப்பொருள்,

எல்லாமென்பதில் 'உம்மை' தொக்கது.

'வழக்கிடவும்' என்றதால் அவரவரும் சிந்திக்கவும் வாழ்த்தவும் வணங்கவும் நின்றது என வுணர்க.

பல்வேறு சமயங்களாவன:— உலகாயதம், பௌத்தம் சமணம், மீமாஞ்சை, மாயாவாதம், பாஞ்சராத்திரம் இவை. புறச்சமயம்; சைவம், பாசுபதம், வாமம், வைரவம், மாவிரதம், காளாமுகம் இவை உட்சமயம். இன்னும் காலேகவாத முதலிய பலவுமாம்.

இச்சமயங்கள் பலவாறு வாதிக்குந் தொடர்பனைத்தும் ஈண்டுச் சொல்லப்புகின் வரையறைப் படாமையின் அவற்றுட்சில சிலவே சுருக்கியெடுத்துக் காட்டுதும்:

உலகாயதன்-பிரபஞ்சத்துக்குத் தோற்றமு மொடுக்கமுமின்றி அது தானே தோன்றி யழியும் எனவும், வேறொரு கர்த்தா அதனை யுண்டாக்கிக் காரியப்படுத்த வேண்டுவதில்லை எனவும் வாதிக்க—சித்தாந்தி அவைகளை மறுத்துரைப்பது.

பௌத்தரிற் சவுத்திராந்திகன்—உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் ஆகிய பஞ்சகந்தஞ் சார்பால் எல்லாந் தோற்றுமென வாதிக்க—பிறனொருவன் கருத்தாவன்றி ஒன்றும் நிகழாது என மறுப்பது.

காலேகவாதி—காலமே கர்த்தா என்று வாதிக்க—அதனை மற்றொருவன் மறுப்பது.

நையாயிக வைசேடிகர்—பரமாணுவிலே பரிணமித்த பிரபஞ்சம் அழிந்து பரமாணுவான பின்னும், ஆத்மாவின் கன்மத்துக்கீடாகப் பிரபஞ்சமாகத் தோன்றி நின்று கழிந்திடும் என்று வாதிக்க— அக்கன்மமும் அணுவும் அசேதன மாதலால் முறையறிந்து தாமாகவே தோற்றுவியாது, அவ்வணுரூபமும் பிரளயத்திலே யழியும் என்றும்; இப்பிரபஞ்சத்திற்கு உபாதானகாரணம் மாயையே என்றும் வாதிக்க— மற்றொருவன் மறுத்துத் தனது

கொள்கையை நிறுத்துவது. இங்ஙனம் பலவாறு வாதிக்கப் படுவனவும்ம. றுக்கப்படுவனவுமாம் இவைமுதலியன சமயகோடி களின் வழக்குகள்.

சைவத்திற்குத் தாண்டவபூஷண னென்னும் மூர்த்தியாயும், பாசுபதத்திற்குத் திருநீறுஞ் சடைமுடியுந் தரித்த மூர்த்தியாயும், மாவிரதத்திற்கு என்புமாலே தரித்த மூர்த்தியாயும், காளாமுகத் திற்கு படிகமும் புத்திரதீபக மணியுந் தரித்த மூர்த்தியாயும், வாமத்திற்கு அக்கினியும் உபவீதமுந் தரித்த மூர்த்தியாயுங், வைர வத்திற்குத் தமருகமும் சிலம்புந் தரித்த மூர்த்தியாயும், பாஞ்ச ராத்திரத்திற்குச் சங்கமுதலிய ஐம்படையுந் தரித்த மூர்த்தியாயும், சாத்தேயத்திற்குச் சத்தி மூர்த்தியாயும், இன்னும் பௌத்தாதி களுக்குப் பௌத்தன்முதலிய மூர்த்திகளாயும் வீற்றிருந்து; அவரவர் நினைத்த வடிவோடுஞ் சென்று, எண்ணியாங் கெய்து வித்தும், தேகாந்தத்தில் முத்தி பதங்கள் அருளியும் விளங்குவது. இஃதே அவ்வச் சமயங்களிலும் நின்றது என்பது.

"எங்கணும் பெருவழக்காய் யாதினும் வல்ல வொரு சித்தாகி இன்பமாய் என்றைக்கும் உள்ளது எது" என்பது:—இவ்வாறு யாண்டும் அறுதிபெருமையாயுள்ள வழக்காகி, எவ்வகைத் தொழி லினும் வல்லதாய், ஒப்பற்ற சித்துருவாகி, பேரின்பவடிவாகி, எக்காலத்தும் நித்தியமாயிருக்கின்றது எப்பொருள்,

ஓரிடத்தும் ஒருகாலத்தும் ஒருவரானும் ஒருவாற்றானும் அவரவர் கொள்கைகளும், உத்தேசம் இலக்கணம் சோதனை இவை முதலியவற்றால் வாதிக்கப்பட்டும் அநுவாதிக்கப்பட்டும் தோல்வி வெற்றிகளுண்டாய்ச் சிறிதும் ஒழிவுபெறுதல் அருமையாதல் பற்றிப் 'பெருவழக்கு' என்னப்பட்டது. ஒரு பொருண்மேல் இருவர் மாறுகொண்டு செல்லும் வழக்குப்போலாது, இது அவ ரவரும் அங்கங்கும் அவ்வக்காலத்தும் தத்தம் பல்வேறு கொள் கைகளை மேற்கொண்டு தொடர்வதாம்.

எவ்வகைத் தொழிலினும் வல்லது என்பது:— சிருட்டி- படைத்தல், திதி - காத்தல், சங்காரம் - துடைத்தல், திரோபவம்- மறைத்தல், அநுக்கிரகம் - அநுக்கிரகித்தல் என்னும் ஐந்தொழி லினும் வல்லமையுண்மை. எவ்வகைப்பட்ட தொழில்களும் இவ் வைந்தனுள் அடங்குமா றுய்த்துணர்க.

இவை தூலம் சூக்குமம் காரணம் என்பவற்றால் மூவைந்தாகும். அவற்றுள் மாயையினிடமாக உயிர்கட்குத் தநு கரண புவன போகங்களைத் தருவது படைப்பாம்.

தநு:—எண்பத்து நான்கு லட்ச பேதமாம்.

கரணம்:— சீவன், வித்தை, சிவன் என மூவகைத்து. விடயாதிகளை அறியுந்தன்மை சீவகரணமாம்.

உயிர்கள் போகங்களை நுகர்வதற்கு முக்காலமாயும், அவற்றை வினைக்கீடாய் அளவிடுவதாயும், உயிர்கட்கு இச்சையாதி மூன்றனையும் எழுப்பும் சார்பாயும், தன்னையும் விடயத்தையும் வேற்றுமையறியவொட்டாமல் மயங்கச்செய்வதாயும் இருக்கின்றது வித்யா கரணமாம்.

வித்யாகரணத்தைப் பொருந்தி நடத்தும் புவனங்கள் இருநூற்றிருபத்து நான்காம்.

ஆன்மாக்கட்கிருவினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் வருவித்து அவற்றை முத்தியிற் சேர்ப்பது சிவகரணமாம்.

போகங்களாவன:—சிவிகை குடை தேர் யானை குதிரைகளும் அறுசுவை மாதர் கீதம் முதலியனவுமாம்.

இவைகளுக்குட் சரீரத்தையும் கரணத்தையும் யான் என்றும், புவனபோகங்களை எனது என்றும் உயிர்கள் கருதிச் சுகாதிகளையநுபவிக்கச்செய்தல் காத்தலாம்.

உயிர்களால் காணப்பட்டவற்றை ஒடுக்கல் துடைத்தலாம்.

இவற்றுட் பலநாளுழன்றும் வெறுக்காமல் ருசிப்பித்தல் திரோபவித்தலாம்.

பிறகு நித்தியமும் அநித்தியமுமாகிய பொருள்களைப்பகுத்துத் தெரிவிப்பது அநுக்கிரகித்தலாம்.

இங்ஙனம் எண்பத்து நாலுலட்ச பேதமான உடல்களினிடத்தே பரமகர்த்தா ஐந்தொழில்கள் செய்வது தூலமென்றும், அத்தூலவுடலின் அவத்தைக் கருவிகளில் ஐந்தொழில்கள் செய்வது சூக்குமம் என்றுஞ் சொல்லுவர்.

காரண பஞ்ச க்ருத்யம் குருமுகமாக வழிபட்டுக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடி அநுபவிக்குமதாகலான்,

அம்முறையை அவ்வாறு உணர்ந்து கொள்ளத்தக்கது. இவ் வண்ணம் எல்லாம் வல்ல சத்தியாகிய சித்தும் இன்பமும் தானேயாம்.

"மேல் கங்குல் பகல் அற நின்ற எல்லை உளது எது" என்பது—சத்திநிபாதத்தின்கண் இரவும் பகலும் இல்லையாக நின்றதொரு நிலைக்களத்தே தானேயா யுள்ளது எப்பொருள்;

'மேல்' என்பது வினையொப்பு மலபரிபாகத்துக்கு மேற்பட்ட இடம், அதுவே சத்திநிபாதமாம்.

ஆன்மா, பயனின் முயற்சிகளையும் தேகபோகப் பற்றுக் களையும் முற்றத்துறந்து பிரிதொருபயனையுங் கருதாமல் தத்துவங்களைச் சடமென் றறிந்து கழன்று, சத்தும் அசத்தும் பகுத்துணர் சத்தாயது ஆன்மாவென்றும் அவ்வாறு காட்டியது அருளென்றும் உள்ளுணர்ந்து, அவ்வருளைப் பற்றுதலாலும், நிட்டையிற் பெயராது நிற்றலாலும், முறையே மாயை கன்மங்களுக்கிடமாகிய சகலாவத்தையையும் ஆணவத்துக்கிடமாகிய, கேவலாவத்தையும் நீங்கின இடமாகிய சுத்தநிலையின்கண்போதஞ் சிறிதுந்தோன்றாமல் நிற்க, பலகோடி சூரியர் ஒரிடத்தொருங்குதோன்றினாற்போல நீக்கமற நிறைபேரொளியாய்ச் சடசித்துக்களின் உள்ளும் புறம்புமாகிப் பூரணநிர்வய நிட்கள சொரூபமாக எங்கெங்கும் பரந்து விளங்கும். இச்சுத்தநிலையே இராப்பகலற்ற விடமென்றும், இன்னும் பலவாறாகவும் பெரியோர் கூறுவர்.

இவ்வெல்லைக்கண் மேலீடாய் நின்ற திருவருட்போதத்தையும் சிவத்தையும் எதிரிட்டுக்காணும் தற்போத நீங்கிச் சிவயோக மெய்துதல் முத்தான்மாக்கட்கியையுமென வேதாகமங்கள் கூறுவனவாம்.

இவ்வெல்லையே; தாதநெறி முதலிய நான்கு நெறிகளுள் சன்மார்க்க நெறியாய் மகாமலப் பிணிப்புக் கட்டறுத்துச், சிவானந்தப் பெரும்பேறு மருவிப், பாச இரிவும் பதியிற் புகலுமின்றி ஒரு நிலையாம் இயல்பு.

இதுவே ஞானவரம்பும், மௌனாரம்பமும், பேசாவநுபூதி பிறந்தவிடமுமாம். உதாரணம்:—

(கொன்றைவேந்தன்.)

"மோனமென்பது ஞானவரம்பு."

(கந்தரநுபூதி.)

“தூசா மணியுந் துகிலும் புனைவா
ணேசா முருகா நினதன் பருளா
* லாசா நிகளந் துகளா யினபின்
பேசா வநுபூ திபிறந் ததுவே.”

மற்றும் வருவனவற்றாற் காண்க.

தனக்கு வழித்துணையாகாக் குடும்பபாரம் தலைக்கொண்டு அதன் பாதுகாப்பினோக்கத்தால் நெடுங்கால மறிவுமழுங்கி, இனி யாண்டு ஓர் சுகங்கூடப் பெறுவலென் றுள்ளயர்ந்து நோக்கியிருந்தவன், தனதோர் நல்வினையுள்தாக, ஒரு நகரின்க ணிருந் தாங்கெய்திய முதியோனை யெதிர்ப்பட்டு வணங்கிக் குறையிரத்தலும், அன்னோனிரங்கி “அஞ்சலை, எனது அநுஞ்ஞையாற்றான் அந்நகர்க்கணெய்துதியாயின் அந்நராதிபதி தயவினாற் சுகமேவாழ்வை” என வுபகரித்து வழிப்படுத்த, தானுமம் முதியோனைப் பணிந்து வழிக்கொண்டு, இடையிலுள்ள பலமிருகாதிக ளடர்ந்த மலை காடு யாறு கவர்நெறிகள் யாவும் பிற்பட அரிதிற் கடந்து சென்று அந்நகரினெல்லைக்கண் அணுகலும், ஆண்டுள்ள செல்வக்கிளர்ச்சியை நோக்கி நோக்கி வியந்து அந்நகரையணைந்து, மந்திரத்தலைவனுதவியால் புரவலனைக் கண்டிறைஞ்சி, அவன் அரசியனெறி நின்று நீடுவாழப் பெற்றோனாகி அங்கணியங்குங்கால், நேர்படுகின்ற நகரின் எல்லையை நோக்குந்தோறும் இது தொடங்கியன்றோ நமக்குச் சுகோதயப்பே றுண்டாயிற்றென்று அதன்பெருமையைக் கருதி அவ்வெல்லையையும் வந்தித்தல் செய்வனாக.

இக்கருத்தே பற்றிப் பெரியோர் கோயில் முதலிய திருப்பதிகடோறு மெய்தியக்கால் அத்தலங்களின் திருவெல்லையை முன்னர் வணங்கு மியல்பை அடியார் புராணந்தோறும் புராணகர்த்தர் கூறியிருப்பது. அம்முறை பிறழ்வின்றி, முத்தியினெல்லைக்கும் முத்திப்பதிக்கும் அணுக்கமான அநுசந்தான முள்ளதால், ‘எல்லை யுளது’ என அக்குறிப்புண்மை புலப்படுத்துவான் நூலாசிரியரும் போற்றினர் போலும்.

“அது கருத்துக்கு இசைந்தது” என்பது:—அவ்வாறாய் மெய்ப்பொருளுணர்ச்சியே பதிவர்க்கம் பசுவர்க்கங்களின் கருத்தெவற்றிற்கும் ஒப்பமுடிந்தது.

“அதுவே கண்டன எலாம்” என்பது,—அம்மெய்ப்பொருளே தூலசூக்குமங்களாற் காணப்பட்ட பூதபௌதிகங்களாகிய விடய பதார்த்தங்க ளனைத்தும் ஆதலால்,

இஃது அசுத்தநிலையில் காணப்படுவதாகிய ஞேயமாம். ஆகவே, சுத்தநிலையிற் காணப்படும் ஞேயமும் ஒன்றுண்டென் பதாயிற்று. இச்சுத்தநிலை மேற்கூறிய திருவருளையே கண்ணாக்கொண்டு யாண்டுங் காணப்பட்ட வனைத்தும் சிவமேயாகவும், பிறிதொன் றின்றாகவும் காண்பதாம். உதாரணம்:—

சிவஞானசித்தியார், சூத் - அ. பா - ௩0.

“அறியாமை யறிவகற்றி யறிவி னுள்ளே யறிவுதனை
யருளினா லறியாதே யறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாகிற்
பிறியாத சிவன்றானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெலாந் தானாய்த் தோன்றி
நெறியாலே யிவையெல்லா மல்லவாகி
நின்றென்றுந் தோன்றிடுவ னிராதார னாயே.”

மற்றும் வருவனவற்றாற் காண்க.

“மோனவுருவெளியது ஆகவும் கருதி அஞ்சலி செய்குவாம்” என்பது,—அம்மெய்ப்பொருளை மௌனரூபமான வெளியீடாகவும் தியானித்துக் கைகூப்பி வணங்குதல் செய்வாம். எ-று.

‘வெளியது’ என்பதில் ‘அது’ பகுதிப்பொருள் விகுதி.

‘வெளியதாகவும்’ என்றதால்—எங்கும்பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி யருளொடு நிறைந்ததாகவும், இச்சை வைத்துயிர்க் குயிராய்த் தழைத்ததாகவும், தட்டாமனின்றதாகவும், வழக்கிடவு நின்றதாகவும், என்றைக்கும் உள்ளதாகவும், எல்லையுளதாகவும், அதுவேகண்டன எலாமாகவும், தனித்தனிக்கருதி அஞ்சலி செய்குவாம் எனவும் உரைக்க.

இவ்வாறு கூறியவாற்றான் ஆதாரங்க ளனைத்திற்கும் அதீத மாகிய நிராதாரப் பரமகுருவை [தக்ஷிணாமூர்த்தியை] அஞ்சலி செய்தமை கண்டுகொள்க.

அதுவன்றி இந்நூலாசிரியர் தாம் சொல்லப்புகுந்த சுருதிகுரு அநுபவங்களையும் அவற்றின் பயனையும் அருட்சார்பாய் நின்று

ஒருவாற்றா னுணர்த்துமதாகிய இந்நூல் இனிது முடிதற்பொருட்டு "ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்" என்னுந் தொடர்நிலைக்கண் 'எண்குணமுங்காட்டி,' 'சௌபானபக்ஷங்காட்டி,' 'மந்திரஞ் சிக்ஷை சோதிடாதி மற்றங்க நூல்வணங்க மௌனமோலி யயர்வறச் சென்னியில்வைத்து ராசாங்கத்தி லமர்ந்தது வைதிக சைவமழகி தந்தோ!' இதுவன்றித் 'தாயகம் வேறில்லை இல்லை,' 'அருளைக் காட்டத்தக்க நெறியின் நெறியேதான் சன்மார்க்கம்' என்றும், "சின்மயானந்தகுரு," என்னுந்தொடர்நிலைக்கண் 'சித்தாந்தமுத்தி முதலே' என்றும், இன்னும் பலவிடங்களினும் பழிச்சுதல் செய்த படி இவ்வாசிரியர்க்கு வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தமே சிறப்புடைத்தாதலால் அஃதொன்றே உடன்பாடென்பது பெறப்படுகின்றது. உதாரணம்:—

சிவஞானசித்தியார் சூத் - அ. பா - கஙு - கசு.

"வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுச்சைவ மருஞ்சிறப்பு நூலா
நீதியினு லுலகர்க்குஞ் சத்திநி பாதர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூ
றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்."

"சித்தாந்தத் தேசிவன்றன் றிருக்கடைக்கண் சேர்த்திச்
செனநமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை யறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று
மொழிந்திடவு முலகரெல்லா மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிராந்தி."

'மௌன உருவெளி' என்பதில் † குடிலையாகிய மூலமநு * வினின்றும் சிவம் சத்திகளின் திருநோக்கத்தால் வெளிவந்தருளிய முதற்கடவுள் என்பதும் அமைந்து கிடத்தலின், தொல்லோர் வழக்கின்படித் தாமும் மெய்ப்பொருளை அம்முதற்கடவுளாகவும் கருதி அஞ்சலி செய்தனர் என உரைத்தலு மமையும். யோகிகள்

† குடிலை—பிரணவம். * மூலமநு—மூலமந்திரம்.

மூலமநுவை மௌனுக்கர மென்றும் மூங்கை எழுத்தென்றுங் கூறுவர்;

முதற்கடவுளாகிய மூத்தபிள்ளையார் மூலமநுவினின்றும் வெளிவந்தருளிய வரலாற்றை விநாயகபுராணத்திற் கண்டுகொள்க.

அன்றியும், இந்நூலாசிரியர் மேலே "மௌனகுரு வணக்கம்" என்னும் தொடர்நிலைக்கண் 'மூலன்மரபில்வரு மௌனகுருவே' என்று தமது ஆசிரியரை வழிபடுகின்றாராகலின், அத்தன்மை யியல்பு வாய்ந்தசிவமே தம்மையாட்கொள்வான் திருவுளங்கொண்டு மேற் கூறிய திருமூலநாயனர் மரபில் குருவடிவாய் எழுந்தருளிவந்து தமக்கு பந்தமோசனம் செய்வித்தமையை யுட்கொண்டு, அவரை ஈண்டும் வணங்குதல் செய்தபடி என்பதுங்காண்க.

இங்ஙனம் குறிப்பாற் பொருளுணர்த்துவது உள்ளுறை யணியாம்.

திருமூலநாயனர் ஸ்ரீ கயிலாயத்திலே ஸ்ரீ நந்திதேவரது அருள் பெற்று அணிமாவாதி அட்டசித்திகளினும் வல்ல சிவயோகிகள். அகத்தியமுனிவர்பாலுள்ள நட்பினுல் அவருடன் சிலநாள் வசிக்க வேண்டிக் கயிலையினின்றுங் காசி சிதம்பர முதலிய அங்கங்குள்ள தலங்களைத் தரிசித்துவந்து திருவாவடு துறைக்கண் பரமசிவத் தைப் பணிந்து, அத்தலத்தின்கண் வசிக்கவிரும்பிக் காவிரிக்கரைச் சார்பிலுள்ள வனத்தில் வரும்போது, அங்கு தம்மை மேய்த்தி ருந்து அந்நாளிற் காலம்பண்ணிவிட்ட மூலன் என்னும் பெய ருள்ள வேரிடையனைச் சூழ்ந்து கதறிக்கொண்டிருந்த பசு மந்தை யைக் கண்டிரங்கி, அவற்றின் றுயர் நீக்கற் பொருட்டுத் தமது யாக் கையை ஓரிடத்திற் சேமித்து வைத்து, அவனுடலிற் பிரவேசித்துப் பசுக்களை யன்று முழுவதும் மேய்த்து, பின்பு அதனதனிடங்களில் அவற்றைப்போக்கி, கணவனிறந்தது தெரியாத இடையன் மனைவி வந்தழைக்கவும் மறுத்துவிட்டு, தாம் சேமித்துவைத்த விடத்திற் போய்ப்பார்க்கத் தமதுடல் அங்கில்லாமை கண்டு அது பரமசிவத் தின் அருளென் றுள்ளுணர்ந்து, தாம் பிரவேசித்த யாக்கையொடு சென்று ஆவடுதுறைக்கண் பரமசிவத்தைத் தரிசித்து, கோயிலின் மேல்பாலுள்ள அரசமரத்தி னிழற்க ணமர்ந்து, ஆகமங்கள் கூறு கின்ற சரியையாதி நான்குபாதங்களையும் ஆண்டுக்கொரு பாசுர மாக மூவாயிரந் திருமந்திரஞ் சொல்லி யருளினர். அவரது அநுக் கிரகம் பெற்ற ஆதீனத்தின் சம்பந்திகள் இந்நூற் கருத்தாவாகிய் தாயுமானமுனிவர்.

'எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந் ததும்,' 'இச்சைவைத்து உயிர்க்கு உயிராய்த் தழைத்ததும்,' மன வாக்கினிற் றட்டாமல் நின்றதும்,' 'எங்குந்தொடர்ந்து எதிர்வழக் கிடவு நின்றதும்,' 'யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய் என்றைக்கும் உள்ளதும்,' 'கங்குல்பக லறநின்ற எல்லை யுளதும்' ஆகிய இவ்வறுவகைத் தன்மைத்தாய பொருளொன்றே ஞேயத் தழுந்தின ஜீவன்முத்தர் கண்டனவெலா மாகுமாதலின், அதனை 'மௌனவுரு வெளியதாகவும் கருதி யஞ்சலிசெய்குவாம்' என முடிக்க.

இவ்வாறனையும் வாய்ப்பாடுகளாகக் கொண்டு நூன்முகத்தில் 'பரிபூரணானந்தம்' என்னுந் தொடர்நிலைமுதல், 'சிற்சுகோதயவிலா சம்' என்பதிறுதியாகிய பன்னிரு தொடர்நிலைகளினும், அதன் வியாபக வியாப்திகளை ஒவ்வொன்றிற் கிவ்விரண்டாக ஒருவாறு குறிப்பித்து அம்மெய்ப்பொருளைப் பழிச்சல் செய்கின்றாராக.

இப்பன்னிரண்டின்மேற் கூறும் "சிதம்பரரகசியம்" என்னும் தொடர்நிலையில் வஸ்து நிண்ணயமும், ஏனைத்தொடர் நிலைகளில் அதனைச்சார்ந்த பன்னெறிகளுமாம். அம் மெய்ப்பொருள் இவ்வி தத் தன்மைத்தாய் விளங்குவதென்று நுவன்றதால், இது பொருட் டன்மை யணி. பொருள்வகை பின்னர்க் கூறுதும்.

இறைவன் ஆன்மாக்க ளுய்யும் பொருட்டுக் கடாக்ஷித்தரு ளிய வேதாகம நெறியைப் பற்றுதார்க்கன்றி, அந்நெறியைப் பற்றிய வழி உளதாகும் தத்துவஞான முடையார்க்குத் தியான சமாதிக ளால் சீவன் முத்தத்துவப்பேறு கைவந்துள்ள தாயுமான முனிவர் தமது சிவானந்தப்பதத் தேர்ச்சியை ஒருவாறு புலப்படுத்துவான் எடுத்துக்கொண்ட இம்முதற்செய்யுள், சொற்கள் வாளா விரியாமை யும், பொருள்கள் விபரீத சந்தேகங்கட் கிடமாகாமையும், சிரவ ணஞ் செய்வார்க்கு இன்பந்தருகையும், சீரியசொற்களுடைமையும், சந்தச்சுவை யுடைமையும், ஆழ்ந்த கருத்தைக்கொண் டிருக்கையும், காரணகாரிய முறைகளை யுடைமையும், சான்றோர் ஆட்சியோடு மாறுபடாமையும், சிறப்பாகிய பொருட்பேற்றைப் பயத்தலும், உதாரண முடையதாதலும் ஆகிய பத்தழகோடுங் கூடி நிற்கின்றது காண்க.

## சிவஞானபோதம்.

(5-வது மலர் 165-வது பக்கத்தொடர்ச்சி.)

### எட்டாஞ் சூத்திரம்—இரண்டாம் அதிகரணம்.

தம்முதல் குருவுமாயுணர்த்த.

---

(இ-ள்.) தமக்கு அந்தரியாமியாய் உள்நின்று இதுகாறும் உணர்த்திவந்த சிவபரம்பொருளே இப்பொழுது குருவடிவமுங் கொண்டெழுந்தருளி அறிவிக்க, உயிர் அறியும் (எ-று.)

இதில் 1-வது—தன்னாற் கூறப்படும்பொருள்—உயிருக்குச் சற்குருவாய் வருவது அரனே.

2-வது—ஐயப்பாடு—சற்குருவாய் (அதாவது ஞானகுருவாய்) வருவது கடவுளோ நம்மிலொருவரோ?

3-வது—பிறர் கூறும்பக்கம்—

(i) உயிர்களுக்குத் தோன்றும்ஞானமானது ஓர் ஆசிரியன் உணர்த்த உண்டாதலேயன்றித் தானே யுண்டாதலில்லை. அவ்வாசிரியன் வினைய நூற்பொருள்களை யுணர்த்தும் நம்மனோரில் ஒருவனாதல் அமையும். (இவ்வாறுகூறுவோர் சாங்கியர் நையாயிகர் முதலியோர்.)

(ii) அரும்பினின்று மலரும் மலரினின்று காயும் காயினின்று கனியும் தாமேயுண்டாவதுபோல சரியை கிரியாயோகங்களின் முதிர்ச்சியால் பிறிது காரணம் வேண்டாது மெய்ஞ்ஞானம் தானேவிளையும். ஆதலால் மெய்ஞ்ஞானத்தை யுணர்த்த அரன் சற்குருவாய் வரவேண்டுவதில்லை.

(iii) அழியாத திருமேனியையுடைய முதல்வன் மாயையின் காரியமாயழிகின்ற வடிவத்தைப் பொருந்தான். பொருந்துவனெனில், அவன் நம்மனோரில் ஒருவனாய் முடிவன். ஆதலால் முதல்வனே சற்குருவாய் வருவன் என்றல் பொருந்தாது. முதல்வன் குருமூர்த்தியையதிட்டித்து (அதாவது ஆதாரமாகக்கொண்டு) நின்று பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு ஞானத்தை உணர்த்துவன் என்பதே பொருந்த முடைத்து. இதுவே ஆகமங்களிற் கூறியதுமாம்.

4-வது,—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு.— சரியை கிரியா யோகங்களை முறையே யநுட்டித்து அதனால் மலபரிபாகம் பெற்ற உயிர்களின் பக்குவத்தையறிந்து உணர்த்துதல் அதுகாறும் உண்ணின்றுணர்த்திவந்த முதல்வனுக்கே கூடுமன்றி ஏனையோர்க்குக் கூடாது. ஆதலால் உயிர்க்கு ஞானாசிரியனாய் வருவது அரனே.

அரும்பினின்று மலரும், மலரினின்று காயும், காயினின்று கனியும் உண்டாவனவாயினும், அரும்பு மலர் காய் கனிகளுக்குச் சூரியனுதவி இன்றியமையாததுபோல், உயிர்கள் சரியை கிரியா யோகங்களை யநுட்டித்து அதன் பயனாகி ஞானத்தை யடைவதற்கும் இறைவன் திருவருள் இன்றியமையாததாம்.

### தேவாரம்

படுவிப்பா யுனக்கேயாள் பலரையும் பணியாமே
தொடுவிப்பாய் துகிலொடுபொன் தோலுடுத் துழல்வானே
கெடுவிப்பா யல்லாதார் கேடிலாப் பொன்னடிக்கே
விடுவிப்பாய் குருகாவூர் வெள்ளடைநீ யன்றே.

இத்தமிழ்வேதப்பனுவலால் இறைவன் உயிர்கள் சரியை கிரியா யோகங்களைச்செய்து தனக்கு ஆட்படுமாறு செய்வது மாத்திரமன்றி, அவைகட்கு ஞானகுருவாய்வந்து தனது கேடிலாப் பொன்னடிக்கே விடுவித்தலாகிய கருணைத்திறமும் விளங்கும். ஆனால், இறைவன் உயிர்களிடம் பாலில் நெய்போல் மறைந்திருந்து அவைகளைச் சரியை கிரியா யோகங்களிற் செலுத்துவன். சரியை கிரியா யோகங்களைச்செய்து மலபரிபாகம் பெற்றபின் தயிரில் நெய் போல் ஞானகுருவாய் வெளிப்பட்டு உண்மை ஞானத்தை யுணர்த்துவன்.

### தேவாரம்.

விறகிற்றீயினன் பாலிற்படு நெய்போல்
மறையநின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோனட் டுணர்வு கயிற்றினான்
முறுகவாங்கிக் கடையமுன் னிற்குமே.

இறைவன் ஞானகுருவாய் வரும்போது மாயாகாரியமாகிய சரீரத்தை யதிட்டித்து நிற்காமல் குருவாகிய சுத்தான்மசைதன்னியமே (அதாவது மலமாசு நீங்கிய உயிரையே) தனக்குச் சொரூபமாகக்கொண்டு நிற்கும். அன்றியும், இறைவன் திருமேனியாகக்

கொண்டருளும் ஆன்மசைதன்னியம் இறைவனைச்சார்ந்து அவ்விறைவன் தன்மையை யடைந்தவிடத்து அவ்வான்மசைதன்னியம் தங்கும் இடமாகிய சரீரமும் மாயாமயமாயிருப்பதொழிந்து அருள்மயமாய்ப் பொலிந்திலங்கும்.

இறைவனுடைய அதிட்டானம் பொதுவெனவும் சிறப்பெனவும் இருவகைப்படும். இவற்றுள், பொது வதிட்டானமாவது (பாலில் நெய்போல்) மற்றெல்லாவுயிர்களிடத்து மறைந்து நிற்றல். சிறப்பதிட்டானமாவது (தயிரில் நெய்போல்) ஞான குருவினிடத்து அவர் தமக்கு விளங்கி, கலப்பினால் ஒன்றாயும் பொருளின் தன்மையால் வேறாயும் நிற்றல். இது ஆவேசபக்கம் எனவும் சொல்லப்படும். (பேய்பிடியுண்டவனிடத்து அவன் செயலொழிந்து அப்பேயின் செயல் விளங்கிநிற்றல் ஆவேசமாம்.) ஆகமங்கள் கூறியதும் இச்சிறப்பதிட்டானத்தையேயாம்.

5-வது.—

உதாரண வெண்பா.

மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்.

அன்வயம்—விஞ்ஞானகலர்க்கு தானே மெய்ஞ்ஞானம் விளையும். அன்றிப் பிரளயாகலருக்குத் தான் குருவாய் முன் உணர்த்தும். அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாய்ப் பின் மெய்ஞ்ஞானம் உணர்த்தும். முன்.

(இ-ள்.) விஞ்ஞானகலர்க்குத் தானே மெய்ஞ்ஞானம் விளையும்=அம்முதல்வன் (மூவகை ஆன்மாக்களுள்) விஞ்ஞானகலருக்குத் தன்மையில் நின்றவாறே (அதாவது உள்நின்றபடியே) தத்துவஞானத்தை விளைவிப்பன்.—அன்றிப் பிரளயாகலருக்குத் தான் குருவாய் முன் உணர்த்தும்=அவ்வாறன்றிப் பிரளயாகலருக்கு நாற்றோளும் முக்கண்ணும் கறைமிடறும் முதலிய உறுப்புகளோடு கூடி முத்தொழில் நடத்திநின்ற தன் இயற்கைவடிவே குருவடிவாகக்காட்டி முன்னாகநின்று தத்துவஞானத்தைஉபதேசித்துஉணர்த்துவன்.— அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குரு ஆய்ப் பின் மெய்ஞ்ஞானம் உணர்த்தும்=அவிச்சையை உடைய சகலருக்கு அச்சக

லர் வடிவுபோலும் வடிவுடைய குருவாகி அவ்வடிவின் பின்னாக மறைந்து நின்று தத்துவஞானத்தை உணர்த்துவன்—மூன் = அவ் வேறுபாட்டை யறிவாயாக. (எ-று:)

முன் என்றது முன்னாகிய முதல்வன் என எழுவாயாய் நின்று உணர்த்தும் என்னும் பயனிலைகள்கொண்டதெனலுமாம்.

விளையும் = விளைவிக்கும். தன்மையில் விளையும் = தன்மையில் நின்றவாறே விளைவிக்கும். எளிதில் சமைக்கப்படுதலை நோக்கி அரிசி தானேவெந்தது என்பதுபோல், விஞ்ஞானகலர்க்கு மெய்ஞ் ஞானம் எளிதில் விளைவிக்கப்படுதலை நோக்கி "தானேவிளையும்" என்றார். மெய்ஞ்ஞானம் என்பது வீடுபயக்கும் உணர்வை.

அஞ்ஞானம் என்பது ஆணவத்தைக் குறிக்குமாயினும், இவ் விடத்தில் சகலர்க்கே அடையாகக் கூறப்பட்டிருத்தலால் அவிச்சை யென்றுரை செய்யப்பட்டது, அவிச்சையாவது மாயாமலத்தின் காரியமாகிய மயக்கமாதலால் இவ்விடத்தில் மாயாமலம் அஞ் ஞானம் என்னப்பட்டது.

அச்சகலர் என்றது தவஞ்செய்தார் என்று முற்கூறிய சகலரை யும், அக்குரு என்றது இவ்வதிகரணத்து மேற்கோளிற் கூறிய குரு வையும் சுட்டியவாறும்.

தானேவிளையும் என்றது விஞ்ஞானகலர்க்குத் தன்மையில் நின்று உணர்த்துதலையும், முன் உணர்த்தும் என்றது பிரளயாகல ருக்கு முன்னிலையில் நின்று உணர்த்துதலையும், பின் உணர்த்தும் என்றது சகலர்க்குப் படர்க்கையில் நின்று உணர்த்துதலையும் வரை செய்து உணர்த்தியதாகும்.

விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூவருள், சகலர்க் குணர்த்துங்கால் இயற்கைவடிவொழித்துப் பிறிதொரு வடிவத்தை ஆதாரமாக நின்று உணர்த்துதலால் அது சாதாரம் எனப்படும். ஏனையிரண்டும் நிராதாரம் எனப்படும். சாதாரம் = ஆதாரத்தோடு கூடியது. நிராதாரம் = ஆதாரமில்லாதது. (ஆதாரம் = இடம்.)

விஞ்ஞானகலர் என்பது விஞ்ஞானகலர் என மருவியது. விஞ் ஞானகலர் = விஞ்ஞானத்தாற் கலையற்றவர் பிரளயாகலர் = பிரளயத் திற் கலையற்றவர். சகலர் = கலையோடு கூடினவர். இவை காரணப் பெயர். விஞ்ஞானகலர் ஆணவபந்த மொன்றுமே யுடையவர். பிரளயாகலர் ஆணவம் கன்மம் என்னும் இரண்டு பந்தமுமுடைய

வர். சகலர்—ஆணவம் கனமம் மாயை என்னு மூன்று பந்தமுமுடையவர். இனி, விஞ்ஞானகலர் அநாதியே ஆணவ மலபந்தமாத்திர முடைய விஞ்ஞானகலரும், அனுபவத்தாலாயினும் விஞ்ஞானத்தாலாயினும் யோகத்தாலாயினும் சந்நியாசத்தாலாயினும் தீக்கையாலாயினும் இடையே மாயாபந்தமும் கன்மபந்தமும் முழுவதும் நீங்கி, அசுத்தமாயையின்மேல் உள்ள புவனங்களில் அனுபவிப்பனவாகிய போகங்கட்கு ஏதுவாய்நின்ற ஆணவமலபந்தம் ஒன்றே உடையராகிய விஞ்ஞானகலரும் என இருவகைப்படுவர். பிரளயாகலர் அநாதியே ஆணவமலமும் கன்மமலமுமாத்திர முடைய பிரளயாகலரும், இடையே பரிபக்குவ விசேடத்தால் மாயாபந்த மாத்திரம் நீங்கி ஏனை இரண்டுமுடைய பிரளயாகலரும் என இருவகைப்படுவர். சகலர் தேவர் மக்கள் முதற் பலவகைப்படுவர். விஞ்ஞானகலருக்குரிய புவனங்கள் அசுத்தமாயைக்கும் சுத்தவித்தைக்கும் இடையே உள்ளன. பிரளயாகலருக்குரிய புவனங்கள் அசுத்தமாயை முதல் அராகம் ஈறான தத்துவங்களில் உள்ளன. சகலருக்குரிய புவனங்கள் மூலப்பகுதிமுதல் பிருதிவி ஈறான தத்துவங்களில் உள்ளன.

## உதாரண வெண்பா.

அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்
செறியுமா முன்பின் குறைக—ணெறியிற்
குறைவுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடென்
குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு.

அன்வயம்—உளங்கள் நெறியின் அறிவிக்க அன்றி அறியா. குறைவு இல் சகன் சூழ் கொள்பவர்க்கு குறைகள் முன்பின் செறியுமாம். குறைவு உடைய சொல் கொள்ளார் கொள்பவத்தின் வீடு (ஆம்) என்.

(இ-ள்.) உளங்கள் நெறியின் அறிவிக்க அன்றி அறியா = உயிர்கள் (சார்ந்ததன் வண்ணமாயிருந்து அறியும் இயல்பினவாதலால்) தத்தமக்குரிய படிவழியின் வைத்து (முதல்வன்) அறிவித்தாலன்றி அறியா.—ஆதலால்—குறைவு இல் சகன்சூழ் கொள்பவர்க்கு = ஞானத்தாற் குறைபாடில்லாத சகக்கடவுளது உபதேச மொழியைக் கொண்டுணரும் பிரளயாகலர்க்கும் சகலர்க்கும்—குறைகள் முன்பின் செறியுமாம் = (அறிவித்தாலறிதலாகிய) குறைகள் முன்னிலையினும் பின்னிலையினும் நிகழ்வனவாம்.—குறைவு உடைய

சொல் கொள்ளார் கொள்பவத்தின் வீடு (ஆம்) என் = (பலவாற்று னுங் கேட்டுச் சிந்தித்தன்றித் தெளியமாட்டாத) குறைபாடுடைய நூல் வேண்டாத நண்ணுணர்வுடைய விஞ்ஞானகலருக்கு முதல்வ ணாற் கொள்ளப்பட்ட தன் உண்மை மாத்திரையின் (அதாவது நிரா தாரமாகிய சொரூப நிலை மாத்திரத்தால்) வீடு பயக்கும் உணர்வு உண்டென்றறிவாயாக. (எ-று.)

இவ்வெண்பாவால், உயிர்கள் தத்தம் பக்குவத்திற் கேற்ற வாறு படிமுறையில் வைத்து அறிவித்தாலன்றி அறியாவாதலால், முதல்வன் விஞ்ஞானகலர்க்கு அறிவுக்குள் அறிவாய் உள்நின்றும், பிரளயாகலருக்கு உருவத்திருமேனிகொண்டு முன்னின்றும், சகல ருக்கு அச்சகலர் வடிவுதாங்கி அதில் மறைந்து பின் நின்றும் உணர்த்துவன் என்பது விளக்கப்பட்டது.

குறை = இன்றியமையாமை. பவம் = உண்மை. வீடு = வீடு பயக்கும் உணர்வு. சூழ் = சூழ்ச்சி (அதாவது நண்ணுணர்வைப்) பயக்கும் உபதேசமொழி. கொள்ளார் = கொள்ளார்க்கு.

## உதாரண வெண்பா.

இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபா
னல்லா யுளவாமா னீர்நிழல்போ—லில்லா
வருவாகி நின்றானை!யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றானே லுற்று.

(இ-ள்.) நல்லாய் = தவத்தால் நன்மையுடைய மாணாக்கனே— ஏந்து இழைபால் முலைப்பாலுங் கண்ணீரும் இல்லா உள ஆம் = ஏந்திய விழைகளையுடைய ஒரு பெண்ணுக்கு (த்தன் குழந்தையி னிடத்துள்ள அருவாகிய அன்பினைப் பிறர் அறியுமாறு வெளிப் படுத்தும் அவ்வன்பினுருவாகிய) முலைப்பாலும் கண்ணீரும் (குழந் தையைக்காணுமுன்) இல்லாதனவாய் (கண்டபின்) உள்ளனவாம். (அதுபோல்)—நீர் நிழல்போல் இல்லா அரு ஆகி நின்றானை = நீரி னிடத்துள்ள நிழல்போல் (உயிர்களிடத்து வெளிப்பட்டுத் தோன் றுதல்) இல்லாத அருவமாய் நின்ற முதல்வனை—தானே உருவாகி உற்றுத்தோன்றானேல் ஆரறிவார் = அவனே குருவடிவாய் வந்து தோன்றிநின்று உணர்த்தானாயின் யார்தாமறிவார். (ஒருவரு மில்லை) (எ-று.)

ஆல் அசை—நீரானது தன்னிடத்து வசிக்கும் உயிர்களுக்கு

இடங்கொடுத்தலினால் நீரினிடத்தில் வெளியுண்டென்பதும், வெளியுண்டெனவே அங்கு நிழலுண்டென்பதும் பெறப்படும். அந்நிழல் வேறுநில்லாது நீரின்கண் விரவிநிற்றலின் நீர்போலப் புலப்படாதாயிற்று. அதுபோலச் சிவசைதன்னியமும் யான் என்னும் உணர்விற்கு விடயமாய்ப் புலப்படும் ஆன்மசைதன்னியத்தோடு விரவிப் புலப்படாது நிற்பதொன்றென்பார் "நீர் நிழல்போல் உற்று இல்லா வருவாகி நின்றானே" என்றார்.

## அர்ச்சாதீபம்

(5-.ம் மலர் 162-.வது பக்கத்தொடர்ச்சி.)

---

சைவர்கள் எல்லா வுபநிஷத்துக்களையுஞ் சிவபரமாகவும் வைஷ்ணவர்கள் அவைகளை விஷ்ணுபரமாகவுஞ் சாதித்துக்கொள்வார்கள். ஏகான்மவாதிகள் அவைகளை அஹம்பிரஹ்மவாதமாகக் கொள்வார்கள். இதனை நம்மவர் அறியார்கள் போலும். அவர் கொண்டாடி மகிழுஞ் சங்கராசாரியர் கைவல்யம், காலாக்னிருத்ர முதலியவைகளுக்குப் பிரத்யேகபாஷ்யஞ் செய்ததும் பிரக்ஷிப்தம் போலும். இவைகளை யுய்த்துணராமல் கைகொண்டது, மனஞ்சென்றது, காகிதம் பிடித்தது என்று எழுதிவிடுவதில் என்னபலன்? நூற்றெட் டுபநிஷத்துக்களில் தசோபநிஷத்துகண்மாத்திரமே சிறந்தவையென்று எந்தச்சைவர்கள், அல்லது எந்த வைஷ்ணவர்கள் கொண்டு கூறினர்கள்? சைவர்களுக்கு யாவும் பொதுவகையால் ஒப்பாயினுஞ் சிறப்புவகையால் ஐந்து உபநிஷத்துக்கள் விசேடம். அப்படியே வைஷ்ணவர்களுக்கு யாவும்பொதுவகையால் ஒப்பாயினுஞ் சிறப்புவகையால் கோபாலதபநம், இராமதபநம், ந்ருஸிஹ்மதபநம், மஹாநாராயணம், ஹயக்ரீவம் என்னும் இந்த ஐந்து உபநிஷத்துக்கள் விசேடம். இப்படியே ஏகான்மவாதிகளுக்கு யாவும் பொதுவகையால் ஒப்பாயினுஞ் சிறப்புவகையால் ஈச-கேந-கட-பிரசிந முதலிய பத்து உபநிஷத்துக்கள் சிலருக்கும், மாண்டூக்யம் ஒன்று மாத்திரஞ் சிலருக்கும் விசேடம். இப்படி விசாரிப்பதொழிந்து தசோபநிஷத்துக்கண்மாத்திரமே ஸர்வஸம்பிரதிபந்ந

மெனவும், ஏனை யுபநிஷத்துக்கள் பிரக்ஷிப்தமெனவும் நம்மவர் நாட்டவந்தது வாட்டமுற்றழிந்தது. இதனை உபமானத்தாலுங் கொஞ்சம் விளக்குகின்றேம். எங்ஙனமெனின், அரசன் தன்னுடைய அதிகாரத்தையும், கீழிட்ட மந்திரிபிரதானியரது அதிகாரத்தையுஞ் செலுத்துகிறான். மந்திரிக்கு அரசனது அதிகாரங்கிடையாது; தன்னுடைய அதிகாரத்தையும் பிரதானியினது அதிகாரத்தையுஞ் செலுத்துகிறான. பிரதானிக்கு அரசன் மந்திரி இவர்களுடைய அதிகாரங்கிடையாது; தன்னுடைய அதிகாரத்தை மாத்திரமே செலுத்துகிறான். இவர்களில் அரசனது அதிகாரம் அவனொருவன்மட்டிலும், மந்திரியினது அதிகாரம் அரசன்-தான் என்னும் இருவர்மட்டிலும், பிரதானியினது அதிகாரம் அரசன்-மந்திரி-தான் என்னும் மூவர்மட்டிலும் நிலைத்தலால், மூவரும் பாராட்டிவரும் பிரதானி அதிகாரமே ஏனை யிரண்டதிகாரங்களினுஞ் சிறந்தது என்று அந்தப்பிரதானி கூறுவதையே ஒக்கும்! ஒக்கும்!! சைவர்கொள்ளும் உபநிஷத்தையும் வைஷ்ணவர்கொள்ளும் உபநிஷத்தையும் யாம் ஆதரியாமையாலும், யாம் ஆதரிக்கும் உபநிஷத்துக்களை அவர்கள் ஆதரிக்கின்றமையாலும், யாம் ஆதரிக்கும் உபநிஷத்துக்களே சிறந்தனவென்று அவர்கூறுவதற்கு மேலுபமானங் காட்டாகும். இதைக்கூர்ந்து யோசிப்பவர்கள் நம்மவரது தேற்றத்தைக்கண்டு மெச்சாமற் போகார்கள். யாம் பாராட்டும் உபநிஷத்துக்களென்று தமக்கும் உபநிஷத்துக்களில் சுதந்தரங் கருதுவது- அரசாங்கத்தில் உத்தியோகம்பெறாத வொருவன் தன்னையும் ஒரு உத்தியோகஸ்தனாக வெண்ணியும், பட்டிக்காட்டிற் போய் ஏழைக்குடிகளை ஏமாற்றியுங் காலங்கடத்திக்கொண்டு கௌரவம் வகித்துத் திரிவதையே ஒக்கும்! ஒக்கும்!! இவர்கள் சுத்த அவைதிகரென்பது வித்தாந்தம். இன்னும் விரிக்கிற்பெருகும்.

இதுகாறுஞ் செய்த விசாரத்தால் பரனுக்கு உருவத்திருமேனியும், அர்ச்சாராதனமும் வேதவிகிதமாயினமை இனிது பரிஷ்கரிக்கப்பட்டமையால், அந்தப்பரமேசுவராராதனம் யாவருக்கும் அவசியமாயிற்று. அந்த ஆராதனம் சிவலிங்கபூசையாக வேதத்திற்கண்டாம். அன்றியும், அது விதிக்கும் அக்னிகாரியமுஞ் சிவபூஜையேயாகும். எங்ஙனமெனின், "ருத்ரோவா ஏஷயதக்நி ஸ்தங் யத்வேதநவெளகோராந்யா சிவாந்யா" என்னுஞ் சுருதியால் பரிதிரியமானனாகிய அக்னி உருத்திரனென்றும், அவ்வுருத்திரனுக்குக் கோரதநுவெனவும், அகோரதநுவெனவும் தநுத்வயங்களுண்டென

வும், அவ்விருதநுவுகளுக்கும் அபிஷேகவசுதாரைகள் பிரீதிகர மெனவு முதகரித்து அக்னிக்ருது சரமேஷ்டகாஜ்யாபிஷேகத்தில் வினியோகங்கூறியும், ஜபாபிஷேகாதி விதிகளைச் சிவப்பிரீதிகர முக்கியஸாதனமாகக் கூறியும் வித்யாரண்யராகிய வேதமூர்த்திகள் பிரகாசம்பண்ணி யிருக்கின்றனர். சிவனை இலிங்கத்தில் பூசிக்க விதிக்கிறபடியே அக்கினியிலும் பூசிக்க அது விதிக்கின்றமையாலும், சிவலிங்கத்தில் பால் தயிர் முதலியவைகள் அபிஷேகத்துக்கு முக்கியமானபடியே சிவாக்கினியினிடத்தில் நெய் முதலியவைகள் முக்கியமாகின்றமையாலும், இரண்டிடங்களிலும் மந்திரபூர்வகமான விதியும், பக்தியுஞ் சிறந்திருக்கின்றமையாலும் யாம் விளக்கியவுண்மை வியக்தமாயிற்று. அக்கினியிலே செய்வது அக்னிபூசையும், பாஷாணத்திலே செய்வது பாஷாண பூசையும் ஆகாது. இரண்டிடங்களிலுஞ் சிவபாவனையே சிறக்கும். இதனால், ஸப்தஹவிர்யஜ்ஞ-ஸப்தபாகயஜ்ஞ-ஸப்தஸோமயஜ்ஞங்களாகிய இருபத்தொருயஜ்ஞங்களிலும் விதிவத்தாக ஆஜ்யத்தைச் சொரிவது கபர்த்தியாகிய சிவபெருமானுக்குச் செய்யும் ஆஜ்யாபிஷேக மென்றே துணியப்படும். "அயம்ஸோமஃ கபர்திநேக்ருதம் நபவதே மதுத்ரிஸப்த யத்துஹ்யாநித்வே யித்ஸதாவிதம் நிஹிதோ யக்ஞியாஸஃ" என்னும் மந்திரத்தாலும் அது விளங்கும். "ஆவோ ராஜா நமத்வரஸ்ய ருத்ரம்" எனவும், "காதபதிம் மேதபதிம் ருத்ரம் ஜலாஷ பேஷஜம்" எனவும், யஜ்ஞரூபத்தால் ஈசுவராராதனம் ஸித்திக்கின்றமையும் வியக்தம். அத்வராஜன் என்றும், மேதபதி என்றும் வேதங்கள் சிவனைக் கூறலால், அவரை அக்னிஹோத்ராதிகளில் உபாஸிப்பது சிவலிங்கோபாஸனையைப்போல அவசியமாயிற்று. இவ்வளவேயன்றிப் போதாயநமுனிகள் "ஆத்மாநம் ருத்ரரூபிணம் த்யாத்வா ருத்ரரூபஸங் ருத்ரமர்ச்சயேத்" என்று காட்டி, தான் உருத்திரவடிவினனாகிப், பின்பு உருத்திரனைப் பூசிக்கவேண்டியதென்று விசிதப்படுத்திச் சிவபூசையை ஸ்தாபித்திருக்கின்றமையாலும், இப்படியே ஸ்மிருதிக்காரரெல்லாமும் பிரகாசம் பண்ணி யிருக்கின்றமையாலும், புராணங்களில் இவ்விஷயம் அதிபிரசித்தி யாயினமையாலும் சுருதி, சதபதப்பிரஹ்மணம் இவைகளாற்பெறப்பட்ட சிவார்ச்சனையானது அவற்றாற்போந்த அக்கினிகாரியத்துடன் ஸர்வசம்பிரதிபந்நமாயிற்று.

கணபதி துணை.

# கோபப்பிரசாத உரை,

(168-வது பக்கத்தொடர்ச்சி.)

---

## வணக்கம்.

தன்றேன் முகத்துச் சடையிற் பிறையணி
குன்றே யேற்குங் கூழையே னுரையே.

## மு ன் உ ரை.

கோபப்பிரசாதம் என்னும் பிரபந்தம் (௯௯) அடியினுள் (௩௯௧) சீரமைந்த இணைக்குறளா சிரியப்பா ஒன்றே. அது பதினொராந் திருமுறையுள் நிலவுகின்றது. அதற்குஉரைதருதற்குப் போதிய அறிவாற்றல் சிறிதுமிலனேனும், நுண்மாண் நுழைபுலமுடையார்க்கு ஓர் ஆராய்ச்சித் துணையாகவும் விழைந்து பிழைபட வுரைப்போர்க்கு ஓர் மறுப்பு விளக்கமாகவும் என்னறிவு சென்றளவில் மூத்தநாயனார் அருள்கொண்டு உரைத்தேன். கோபம் பிரசாதம் என்பன இறைவனாது கோபச்செயலும் அநுக்கிரகச் செயலுமாம். கோபந்தானும் பிரசாதமேயெனத் தெளியவும் நின்றது. கோபம் அதனாற் செய்யப்படும் தண்டத்தை யுணர்த்திற்று. இவ்விரண்டும் முறையே மறக்கருணை அறக்கருணை எனப்படும்.

## கோபப்பிரசாத உரை.

1. பெரிது தவறு உடைத்து பெரிது தவறு உடைத்து என்றது.—பெரிதும் பிழையுடையது பெரிதும் பிழையுடையது என்பதாம். இத்துணைக்கோபத்தோடும் கூறுவதனால் அஃதியாதெனத் தெளிய வெஃகினேன் என்பையேல், யாமுரைப்பதைக் கடைபோக நூனெறியே ஒற்றித்துக்கேட்டுத் தெளியக்கடவாய். கோபத்தின் மிகுதிபற்றி அடுக்கிவந்தது.

2, வெள்திரை கரும் கடல்மேல் துயில்கொள் அண்டவாணனுக்கு ஆழி அன்று அருளியும் எ-து.—வெள்ளிய அலைகளைச் செய்யும் பெரிய பாற்கடற் பரப்பின்மேலே பாம்பணைப்பாயலில் உறக்கங்கொள்வனேனும் மேலண்டத்துள்ள வைகுண்டவாழ்க்கை கொண்ட திருநெடுமாலுக்குச் சக்கரப்படையை அக்காலத்திற் கொடுத்தருளியும் எ-ம். திருநெடுமால் ஆயிரந்தாமரை மலர்களால்

அர்ச்சிக்கும் விரதம் பூண்டு, அங்ஙனம் பூசிக்கின்றுழி, ஒருதினம் ஒருமலர் குறையக்கண்டு அதை நிறப்பிக்கொள்ளத் தன்கண்ணொன்றினைப் பறித்துச் சாத்துதலும், சிவபெருமான் தாம் முன்னர்ச் சலந்தரனைக்கொன்ற சக்கரத்தை அத்திருநெடுமால் விரும்பிய வண்ணமே கொடுக்க ஏற்று அதனைத்தாங்கும் வலிதனக்கின்மையை விண்ணப்பித்துக்கொள்ள, உடனே பெண்பாகர் அச்சக்கரத்தைத் தமது நகநுனியால் வகிர்ந்து வட்டித்துக் கொடுத்தருளினார் என்பது சரித்திரம்.

3. உலகம் மூன்றும் ஒருங்கு உடன்படைத்த மலரோன் தன்னை வான்சிரம் அரிந்தும் எ-து.—மேல் கீழ் நடு வென்னும் உலகம் மூன்றினையும் ஒரேமுறையிற்றானே படைத்த தாமரை வாழ்க்கையோனாகிய பிரமதேவனை அவன் ஐந்தலைகளில் உச்சித் தலையை நகநுனியாற்கொய்து அகந்தை அடங்கத் தண்டித்தும் எ-ம்.

4. கானவேடுவன் கண்பரிந்து அப்ப மற்று அவற்கு வான நாடு அருளியும். எ-து.—காட்டுவேடுவராகிய திண்ணனார் தமது கண்ணை இரக்கமீக்கொண்டு காளத்திக் கண்ணப்பனார் கண்ணினின்றும் பெருகுங்குருதி தடைப்படுமாறு அப்புதலும், அவ்வருஞ்செயல் புரிந்த கண்ணப்பநாயனாருக்கு முத்தியுலகந் தந்தருளியும் எ-ம்.

5. கடிபடு பூ கணை காமனார் உடல் பொடிபட விழித்தும் எ-து.—மணம்பொருந்திய ஐம்மலர்களாகிய அம்பினையுடைய மன்மதனாருடலம் நீறுபட்டொழிய நுதற்கண் விழித்துத் தண்டித்தும் எ-ம்.—[ஐம்மலர்களாவன—அசோகு மா முல்லை தாமரை நெய்தற் பூக்களாம்.]

6. பூதலத்து இசைந்த மானுடன் ஆகிய சண்டியை வானவன் ஆக்கியும். எ-து.—நிலமிசையே பிறவியிற் பொருந்திய மானுடவடிவினராகிய சண்டேசுர நாயனாரை அவ்வடிவுடனே தேவர்கள் வணங்கும் பெருந்தேவனாக அநுக்கிரகம் புரிந்தும் எ-ம்.

7. மறிகடல் உலகின் மன் உயிர் கவரும் கூற்றுவன் தனக்கு ஓர் கூற்றுவன் ஆகியும் எ-து.—திரைகள் மறியுங் கடல்சூழ்ந்த நிலத்தின் கணுள்ள உயிர்களைப்பற்றிச் செல்லும் இயமனுக்குத் தாம் மற்றோர் இயமனாகித் தண்டித்தும் எ-ம்.

8, கடல்படு நஞ்சம் கண்டத்து அடக்கியும் எ-து.—பாற்கடலிலுண்டாகிய காளகூடவிடத்தைதேவர்களைக் காத்தற்பொருட்டுத் தமது திருக்கண்டத்தில் அடக்கியருளியும். எ-ம்.

9. பருவரை சிலையாப் பாந்தள் நாண் ஆ திரிபுரம் எரிய ஒருகணை துரந்தும் எ-து.—மகாமேருமலையே வில்லாகவும் வாசுகி என்னும் பாம்பே நாணாகவும் கொண்டு மூவிடங்களின் மாறிமாறித் திரியும் மும்மதில்களும் எரியும்படி ஒரே பாணத்தைச் செலுத்தி அம்முப்புரவாசிகளைத் தண்டித்தும் எ-ம்.

இரும்பு வெள்ளி பொன் என்னும் மூன்றானும் இயைந்த மூன்றுகோட்டைகளும் தாருகாக்கன் கமலாக்கன் வித்தியுன்மாலி என்னும் அவற்றி னதிபர்கள் விரும்பியாங்கே தனித்தனி மேல் கீழ் நடு உலகங்களில் மாறிமாறிப் பறந்துசென்று வைகுண்டமாதி வைப்புகளைப் பாழ்படுத்துங்கால், வாசுதேவன் முதலிய தேவர்கள் சிவசன்னிதியை அடைந்து ஸ்ரீ தக்ஷிண மூர்த்தியின் மந்திர செப தியானங்களாற் பிரார்த்தித்த வழி, சிவபெருமான் மகா மேருவை வில்லாகவும், வாசுகியை நாணாகவும், அங்கி நுதியும் அரி அதன் முக்கோணவடிவும் காற்று காம்புவடிவுமாகப் பொருந்திய அம்பாகவும் எடுத்துக்கொண்டு, பூமியாகிய இரதத்தில் ஆரோகணித்துச்சென்று அந்தமூன்று கோட்டைகளையும் ஓரிடமாக்கித் திருப்புன்னகையால் எரித்தார். அப்பொழுது அவ்வில்லிற் கோத்த அம்புருவாயிருந்த தேவர்கள் தமக்கு யாதும் பயன் கிடைத்திலவே யென வருந்த, அஃதறிந்த பரமபதி அவர்களுக்குந் தோல்வியுறா வண்ணம் செலுத்தினர் என்பது சரித்திரசாரம்.

"கல்லானிழற் கீழாயிடர் காவாயென வானோர்
எல்லாமொரு தேராயயன் மறைபூட்டிநின் றுய்ப்ப
வல்வாயெரி காற்றீர்க்கரி கோல்வாசுகி நாண்கல்
வில்லாலெயி லெய்தானிடம் வீழிம்மிழலையே."

என்னுந் தேவாரமு மிதனை வற்புறுத்தும்.

10. கல்கொண்டு எறிந்தசாக்கியன் அன்புதற்கொண்டு இன் அருள்தான் மிக அளித்தும் எ-து.—செங்கற்களைக் கொண்டெறிதலே திருத்தொண்டாகச்செய்த சாக்கிய நாயனாரது இடையறாப் பேரன்பினைத் தாம் கைக்கொண்டு இனியபேரருளை அவருக்குப் பெரிதும் கொடுத்தருளியும் எ-ம்.

11. கூற்று எனத்தோன்றியும் கோளரிபோன்றும் தோற்றிய வாரணத்து ஈர்உரி போர்த்தும் எ-து.—கதங்கொண்ட கோபத்தானே இயமனே எனும்படி யாகாக்கினியினின்று வெளிவந்தும் அண்ணாந்து புழைக்கரத்தைச் சுழற்றிவருதலானே யாளியை ஒத்தும் எதிரேவந்த யானையினது பருத்ததோலை உரித்துப் போர்வையிட்டுக் கிருத்திவாசராய் அதனைத்தண்டித்தும் எ-ம்.

12. நெற்றியிற் கண்ணும் நீள்புயம் நான்கும் நற்றா நந்தீச்சுவரர்க்கு அருளியும் எ-து—நெற்றியிலே கண்ணையும் நீண்ட நான்கு கரங்களையும் தம்மைப்போல நன்றாக நிலைபெறும்படி திருநந்திதேவருக்குக் கொடுத்தருளியும் எ-ம்.

13. அறிவினை ஓரா அரக்கனார் உடல் நெறநெற இறுதர ஒருவிரல் ஊன்றியும் எ-து.—பலவாற்றானும் ஆராய்ந்தறிந்தே செய்யற்பாலதாந் தொழிற்றிறத்தை அங்ஙனம் ஆராய்ந்தறியாது திருக்கைலாசமலையைப் பெயர்க்குமாறு நிகலத்திற்றாங்கிய இராவணனது உடம்பு நெறநெறவென்னும் ஓசையுடனே விரைவில் ஒடிந்தொழியும்படி தமது திருப்பாதத்தின் ஒருவிரனுதியால் அழுத்தித் தண்டித்தும் எ-ம்.

14. * திரு உருவத்தொடு செங்கண் ஏறும் அரி அன திண்திறல் அசுரனுக்கு அருளியும் எ-து.—தமது சாரூபத்துடனே சிவந்தகண்களையுடைய இடபவாகனத்தையும் வீரத்தாற் சிங்கேறு போன்ற திண்ணியவலிய ஒரசுரனுக்குக் கொடுத்தருளியும் எ-ம்.

15. பல்கதிர் உரவோன் பல்கெடப் பாய்ந்தும் எ-து. பல கிரணங்களையுடைய ஞானத்தனாகிய சூரியனது பற்கள் உதிரும்படி உதைத்துத் தண்டித்தும் எ-ம்.

16. மல்கு பிருங்கி இருடிக்கு மாவரம் ஈந்தும் எ-து. சிவஞானம் நிறைந்த பிருங்கிமாவிருடிக்குப் பெருவரத்தைக் கொடுத்தருளியும் எ-ம்.

17 தக்கன் வேள்வி தகைகெடச் சிதைத்தும் எ-து.—தக்கன் கனகலத்திற்செய்த யாகமானது அழகுகெட்டொழியுமாறு அழித்து அவன்றலையை அறுத்துத்தண்டித்தும் எ-ம்.

---

* இச்சரித்திரமறிந்தா ருதவினன்றாம்.

18. மிக்கவரம் நந்திமாகாளர்க்கு அருளியும் எ-து.—கணங்கட்குத் தலைமையாகும் பெருவரத்தை நந்திமாகாள தேவருக்கு அநுக்கிரகித்தும் எ-ம்.

19. செந்தீக்கடவுள் தன்கரதலம் செற்றும் எ-து.—அக்கினி தேவனது கைகளைவெட்டி அவனைத் தண்டித்தும் எ-ம்.

20. பைந்தார் நெடும்படை பார்த்தற்கு அருளியும் எ-து—பசியவெற்றி மாலையணிந்த தமது பாசுபதப்படையை அருச்சுனனுக்குக் கொடுத்தருளியும் எ-ம்.

21. கதிர்மதி தனை ஓர்கால் பயன்கெடுத்தும் எ-து.—அமிர்த கிரணங்களையுடைய சந்திரனை ஒருபக்க காலத்திற் பயன்படாவாறு தேய்த்துத் தண்டித்தும் எ-ம்.

22. நிதிபயில் நீள்நகர் குபேரற்கு ஈந்தும் எ-து.—சங்கநிதி பத்மநிதிச் செல்வமோங்கும் நீண்ட அளகப்பதியினை அழகிற் குறைந்த குபேரனுக்குக் கொடுத்தருளியும் எ-ம்.

23. சலந்தரன் உடலம் தான் மிகத்தடிந்தும் எ-து.—சலந்தராசுரனது உடம்புதான் இருபிளவாமாறு பெரிதுந் தண்டித்தும் எ-ம்.

24. மறைபயில் மார்க்கண்டேயனுக்கு அருளியும் எ-து.—வேதத்தைப்பயின்று அதன்பயனுஞ் சைவநெறி கடைப்பிடித்த மார்க்கண்டேய முனிவருக்கு இயமபயம் போக்கி அநுக்கிரகித்தும் எ-து.

25. தாரகன் கொல்ல முன்காளியைப்படைத்தும் எ-து.—தாரகாசுரனைக் கொல்லும்படி முன்னொருகாலத்து காளிதேவியைத் தோற்றுவித்து அவனைத் தண்டித்தும் எ-ம்.

(இன்னும் வரும்.)

---

## ஓர் நன்கொடை.

**ஸ்ரீமான் மெ-அரு-நா-இராமநாதன் செட்டியரவர்கள் இத்திருக்கூட்டத்திற்கு நிகழும் நவம்பர்மீ 75 ரூபா நன்கொடை யளித்தார்கள்.**

# ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம்.

(5-வது மலர், 158-வது பக்கத் தொடர்ச்சி.)

என்னும் பொருளைத் தருகின்ற இந்த பத்து சுலோகங்களாலும், அரிஹரதாரதம்மியமென்னு நூலாலும், சிவபரத்துவஸ்தாபனஞ்செய்தனர். இதுநிற்க,

ஸ்ரீ சுருதிசூக்திமாலை முதலியவைகளால் மகாதீரராகிய அரதத்தாசாரியர் சிவபெருமானுடைய பரத்துவஞ் சாதித்தபோது, அவருடைய திருவருளினாலே ஒழுகக்காய்ந்த அயபீடமானது சீதளமாகிய சந்தனச்சேற்றை ஒத்துக்குளிர்ந்தது. அவர் இவ்வாறு வேதப்பிரமாணங்கொண்டும், புராணப் பிரமாணங்கொண்டும், ஸ்மிருதிப் பிரமாணங்கொண்டும் சிவபிரானுடைய பரத்துவத்தை ஸ்தாபனஞ்செய்து, பண்டிதர் சபையிலே வைதிகாக்கிரராய்ப் பிரகாசித்தார். சபையிலுள்ள பெரியோரெல்லாம் வாசுதேவர்குமாரராகிய அரதத்தாசாரியரைச் சிவபெருமானேயாமென்று துதித்து, அவருடைய திருவடித்தாமரைகளிலே வீழ்ந்து நமஸ்கரித்துத் தத்தம் கிருகம் சார்ந்தார். பின்னர் அரதத்தாசாரியர் காவேரியிலே போய் ஸ்நானஞ்செய்து, வைதிக சந்தியா கருமங்களை முடித்து, சனங்கள் நாற்புடையிலும் சூழ்ந்து நிற்ப, அன்பினோடுஞ் சிவார்ச்சனை செய்தார். அதன் பின்னர் தாயானவள் தனது புதல்வரைக்கட்டித் தழுவி உச்சிமோந்து, துன்பத்தினாலும் இன்பத்தினாலும் நேர்ந்த கண்ணீரினாலே தன்குமாரனை அபிஷேகித்து, பாலனே! நீ மிகுதியும் பசியினாலே வாடினை! என்கண்மணியே! வீட்டுக்குப் போசனஞ் செய்யுமாறுவருதி என்றாள். இங்ஙனங் கூறிய தம்மினிய தாயாருடைய வசனத்தைக்கேட்டு, அவர் வீடு சார்ந்து சிவபிரானைத் தியானித்துக்கொண்டு சிவநிவேதனத்தை அயின்றார். அக்காலந் தொடுத்து எக்காலமுந் திரிகாலமுஞ் சிவபூசைசெய்து சிவஸ்தோத்திரஞ் செய்து இன்பத்தோடு வசித்தார். அப்போது அவர் பிதாவாகிய வாசுதேவர் தமது புதல்வருடைய அருள்வாக்கின் வன்மையை வியந்து, அவரை நோக்கி யான் அறியாமையினாலே செய்தவைகளை க்ஷமிக்குதிர் என்றார். சப்த முத்திரைகளாகிய சங்குசக்கரங்களை யுடையவரும், ஊர்த்துவ புண்டரமுடையருமாகிய

வைஷ்ணவர்கள், அவரை நோக்கி காருண்ணிய மூர்த்தியே! எங்களுக்குப் பிராயச்சித்தம் என்னை? எங்களுக்குப் பரலோககதி எங்ஙனமாகும்? என்று வேண்டினார்கள். அதற்குப் பாலர் ஸ்மிருதிகளும் பெரியோர்களுஞ் சொல்லிய பிரயாச்சித்தமே உங்களுக்காகும். எங்ஙனமெனில், உங்கள் தேகத்தைச் சங்கு சக்கர முத்திரைகளினாற் சுட்டமைக்குப் பிராயச்சித்தம்: விபூதி உத்தூளன திரிபுண்டரமேயாம். எவ்வகைப்பட்ட பாவங்களையும் ஒழித்தற்கும், பிராமணர்முதல் சண்டாளர் இறுதியராம் எல்லோரையும் பாசத்தினின்று முத்தராக்குதற்கும் விபூதியே சிறந்த சாதனமென்று கொண்டு பெரியோர் தரித்தார் என்று திருவாய்மலர்ந்து, சிவபெருமானுடைய செவ்விய ஐந்துமுகங்களுள்ளே பாவத்தைப் போக்கும் அகோர முகத்தைத் தியானித்து, முன்னே தமது பிதாவுக்கும், பின்னர் வைஷ்ணவப் பிராமணர்களுக்கும் சிவத்துவப்பேற்றிற்கு அறிகுறியாகிய விபூதியிட்டு, திருவருட்பேற்றிற்கு அறிகுறியாகிய உருத்திராக்ஷமுந்தரித்து, பஞ்சாக்ஷரோபதேசஞ்செய்து, சிவபூசை எழுந்தருளச்செய்து, சிவபூசாவிதியும் உபதேசித்தருளினார். அங்ஙனம் உபதேசிக்கப்பட்ட வைஷ்ணவப் பிராமணர்களெல்லாம் அரதத்தாசாரிய சுவாமிகளால் திரிகாலங்களிலும் உத்தமோத்தம சிவபுண்ணியமாகிய சிவபூசைசெய்யும் பெரும்பாக்கியம் படைத்துக் காலங்கழிப்பாராயினர்.

அரதத்தாசாரியார் பால்பருகிவரும் பாலியாவஸ்தையிலே தானே சிவபெருமானிடத்திலே திருவருட்பிரசாதம் பெற்றமையும், பிறரொருவரிடத்திலே போய் வித்தை கல்லாது சிவப்பிரசாதத்தினாலே சகலவேதசாஸ்திரங்களை உணர்ந்தமையையும், சிவலிங்கபூபதி என்னும் அரசன் கேள்வியுற்றான். கேட்டபோதே சிவபக்தனும், சிவபெருமானுடைய திருவடித்தாமரையேயன்றி மற்றொன்றனையும் மறந்தும் நினையாதவனுமாகிய அவ்வரசன் விம்மிதமடைந்து, அரதத்தாசாரிய சுவாமிகளை அடைந்து, அவரது திருவடித்தாமரைகளைத் தமது சிரசினாற்றாங்கி, எனது நாதரே! மதுராபுரிநாயகராகிய சுந்தரேசப்பெருமான் பாண்டியனாகிய என்னைக் காக்கும் பொருட்டு இந்த வடிவத்தோடு ஈண்டு எழுந்தருளினாரோ என்று சொல்லித் துதித்தான். அப்போது அங்குநின்ற வித்துவப் பிராமணர்கள் அரசனைநோக்கி, அரசனே! நீவிர் சொல்லியது ஒக்கும். அங்ஙனமில்லையாயின், வேதாதிகளையெல்லாம் ஓதாதுணர்ந்து

எல்லோரையும் வாதிலே செயிக்க அரதத்தாசாரிய சுவாமிகளுக்கு வன்மை எங்ஙனம் உண்டாகும்! என்றார்கள். அந்த வித்துவான்கள் இங்ஙனம் சொல்லியபோது, "நேத்ரகமலத்தினாலே சிவபெருமானை முன்னரே பூசித்த மகா விஷ்ணுவே லோகத்தைக் காக்கும்பொருட்டும், சிவபக்தியை விளக்கும்பொருட்டும், வைதிக நெறியை நிறுத்தும்பொருட்டும், பின்னரும் பிராமணகுலத்திலே அரதத்தர் என்னும் நாமத்தோடு திருவவதாரஞ் செய்தார்" என்று சிவபெருமானுடைய திருவருளினாலே அசரீரிவாக்கு அங்கு எழுந்தது. சனங்கள் அந்த வார்த்தையைக்கேட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியுமெய்தி வேதசொரூபியாகிய அவருடைய பாதயுகளங்களிலே வணங்கினார்கள். அந்நகரத்துப் பிராமணர்களும் அவரைத் தன்னியரென்று வணங்கினார்கள். அதன் பின்னர் அரசனும் அவரைச் சிவபிரானே என மதித்து வணங்கி மண் பொன் வஸ்திரம் என்பவற்றை உபகரித்து, சுவாமீ! உம்மையன்றி எனக்கு மற்றோர் தெய்வமில்லை; ஆதலில், அடியேன்மீது நாதராகிய நீவிர் திருவருள் பாலித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தான். அப்போது ஆசாரியசுவாமிகள் அவனை நோக்கி, அரசரே! உம்மை ஒத்தார் திரிபுவனங்களினும் இல்லை. நீவிர் சிவகிருபையை எய்தப்பெற்றீராதலில் சைவராதற்குரிய அருள்பூண்டீராயினீர் என்று திருவாய்மலர்ந்து, அவருக்கு ஸ்ரீபஞ்சாக்ஷரோபதேசஞ் செய்து ஸ்படிக லிங்கபூசை யெழுந்தருளச்செய்து கொடுத்தார். அரசர் அதுகண்டு மகிழ்ந்து அவருடைய திருவடிகளிலே சுவர்ண புஷ்பங்களை வேண்டியமட்டும் இறைத்தார். சிவபெருமான் குபேரனோடு சினேகம் பெற்றாற்போல, ஆசாரியசுவாமிகளும் சிவலிங்கபூபதி என்னும் அரசனோடு சிநேகமுற்றிருந்தார். ஆசாரியர் அரசனுக்கு நெற்றியிலே விபூதிதரித்து, அரசரே! நீர் சிவபூசை செய்து, சிவகைங்கரியஞ் செய்துகொண்டிருக்குதிரென்று ஆஞ்ஞை செய்தருளினார். அரசனும் அதற்கியைந்து அன்பினோடு அவரைப் பிரதக்ஷிணஞ் செய்து நமஸ்கரித்து அநுமதி பெற்றுக்கொண்டு தனது சேனையோடு அரண்மனை சார்ந்தான்.

## பித்தவாயு லேக்கியம்.

இதை அவரவர்கள் வயது, சரீரம், ரோய், அநுபவம், அநுகூலங் களுக்கு எற்றபடி, காலை, அல்லது மாலை, அல்லது காலையு மாலையும், அல்லது போஜனத்திற்கு பிறகு, சிறு சிறு கெச்சைக்காயளவு சாப்பிட்டு வந்தால் பித்தவாயு பறந்தோடும். பசிதிபனமும் சரீரபுஷ்டியும் உண்டாம். இதுவே கைகண்ட தாதுபுஷ்டி மருந்துமாம். இதை அநுபவத்தாலறியலாம். இதற்குப் பத்தியமில்லை. 20-வேளை லேக்கியம் அடங்கிய டப்பியின் விலை ரூ. 1-4-0. வி.பி. யில் அனுப்பினால் 4-அணு அதிகமாகும்.

இருக்கம் - கண்ணப்பமுதலியார்,
நெ. 43, பாளையப்பன் வீதி, ஏழுகிணறு, சென்னை.

## அரிய இரண்டு உரை நூல்கள்.

சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம் மூலமும், ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் இயற்றிய பதவுரை, குறிப்புரையுஞ் சேர்ந்தது. காலிக்கோ பைண்டு 4-வாலியம் விலை ரூபா 18-8-0.

பரஞ்சோதிமுனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம் மூலமும், சோடசாவதானம்-சுப்பராயச்செட்டியாரவர்கள் இயற்றிய பதவுரை, குறிப்புரை, இலக்கணக்குறிப்பு முதலியனவும் அடங்கியது. காலிக்கோ பைண்டு 2-வாலியம் விலை ரூபா 13-8-0.

குறிப்பு:— நம்மிடம் கொஞ்சப்பிரதிகளே இரண்டினுமிருத்தலால் வேண்டும் அன்பர்கள் விரைவில் எழுதிப் பெற்றுக்கொள்ளுதல் நலம்.

தமிழ்ச்செய்யுட்கலம்பகம்: இது ஸ்ரீமத் ஜி. யூ. போப்பையர் அவர்களால் தமிழில் உள்ள பலநீதிநூல்களினின்றும் எடுத்துத் தொகுத்துக் கருத்துரையை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்பட்ட 612 அரிய தமிழ்ச்செய்யுட்கள் அடங்கியது. முன் விலை ரூ. 4. இப்போது ரூ. 1 ஆகக்குறைத்திருக்கிறோம்.

## தேவகோட்டை
## ஸ்ரீமான் தமோதரம் பிள்ளை சிவகதிப் பேறு.

சைவ சமயாபி விருத்தியினிமித்தம் மிக உழைத்தவரும் தேவகோட்டை சிவாகம சித்தாந்த சங்கமப் போதகாசிரியருமாயிருந்த ஸ்ரீ தாமோதரம் பிள்ளையவர்கள் (31—10—19) சிவகதியடைந்தமை தெரிந்து வருந்துகிறோம்.

## வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் இயற்றிய அரிய நூல்கள் பிரமாநுபூதி விலை ரூ. 1. சிவாதிக்யரத்நாவளி ரூ. 1. சிவபாரம்யப்பிரதரிசிநி, சிவதத்வ சிந்தாமணி ரூ. 1. ஆசாரியப் பிரபாவம் ரூ. 1-8. வேதாந்த மதவிசாரம் 12 அணா. பிரம்ஹதத்வ நிரூபணம் 12 அணா. வேதசிவாகமப் பிரமாண்யம் ரூ. 1. ஆபாசஞான நிரோதம் 12 அணா. மெய்கண்ட சிவதூஷண நிக்ரகம் 8 அணா. சித்தாந்த சேகரம் முதலியன 12 அணா. துகளறுபோதம் முதலியன 8 அணா. ஷை ஆசிரியர் இருவகை அழகிய புகைப்படம் 12 அணா தனித்தனி.

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் இயற்றிய உயர்ந்த அறிவுநூல்கள்: சைவசித்தாந்த ஞானபோதம் விலை ரூ. 2-4. மரணத்தின்பின் மனிதர்நிலை ரூ. 2-4. சாகுந்தலநாடகம் ரூ. 1. பண்டைக்காலத் தமிழர் ஆரியர் 10 அணா. சிந்தனைக் கட்டுரைகள் 8 அணா. நாகநாட்டரசி 1-ம் பாகம் ரூ. 1, 2-ம் பாகம் ரூ. 1. முல்லைப் பாட்டாராய்ச்சியுரை 3-ம் பதிப்பு ரூ. 1-4. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை 2-ம் பதிப்பு ரூ. 1-8. சோமசுந்தரக் காஞ்சியாக்கம் 12 அணா. சாதிவித்தியாசமும் போலிச்சைவரும் 3 அணா. கடவுளுக்கு அருளுருவமுண்டு 3 அணா. பெற்றோர் கடமை 3 அணா. ஆலயவழிபாடு 2 அணா. சைவசமய பரிபாலனம் 2 அணா. சிறுதேவதைகட்கு உயிர்ப்பலி இடலாமா? 2 அணா. ஷை ஆசிரியர் பண்டித நிலைப்படம் 6 அணா. முழுப்படம் 7 வகை 12 அணா.

வேண்டுவோர்.

**திருசங்கர் கம்பெனி,**

பெருமாள் வடக்குரதவீதி,

பாளையங்கோட்டை.

(அல்லது) (திருநெல்வேலி.)

திருசங்கர் கம்பெனி,

பல்லாவரம் (S. I. R.)

என்ற விலாசத்திற்கு எழுதுக.